**சென்னை–21, தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை. திருமதி. சா. சாந்தினி, எம்.எஸ்.ஸி.,(விவ ,).**

**செ.மு.ஆணை.எண்.அ/1471/2023** **நாள்.' 30 –01–2025**

**பொருள்** பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4–ல் அடங்கிய பணிகள் – 24.07.2022 அன்று நடைபெற்ற தேர்வில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, வேளாண்மை துறை மூலம் தோட்டக்கலைத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – இவ்வலுவலகத்தில் பணியேற்ற இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை** 1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 அவர்களின் குறிப்பாணை எண். 453/PSD-B1/2022. நாள்.25.07.2023
2. சென்னை–05, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.OPS 5/92705/2023. நாள்.08.12.2023
3.சென்னை – 05 இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சென்னை–05 அவர்களின் செயல்முறை ஆணை எண். அபபி2/24910/2023. நாள்.14.12.2023.
4. வட்டாரக் கல்வி அலுவலர், எலச்சிபாளையம், நாமக்கல் அவர்களின் கடித எண்.1445/அ1/2024. நாள்.16.10.2024.
5.தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, எலச்சிப்பாளையம், நாமக்கல் அவர்களின் கடித எண்.14/2025. நாள்.10.01.2025.
6.முதல்வர், ஸ்ரீ ரெங்கா வித்யாலயா மேல்நிலைப்பள்ளி ராயர்புரம் , நாமக்கல் அவர்களின்கடித எண். இல்லை. நாள்.23.01.2025

*******

**<u>ஆணை</u>**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் 24.07.2022 அன்று நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி 4–ல் அடங்கிய பணிகள் மூலம் தமிழ் வழியில் பயின்றவர்கள் அரசு பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, வேளாண்மை துறை மூலம் தோட்டக்கலைத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக ( பிணையமற்றது ) பணியில் சேர்ந்த திரு.எஸ். தினேஷ்குமார் அவர்களின் பணியானது தமிழ் வழிச்சான்றின் உண்மை தன்மை சரிபார்க்கப்பட்ட பின்னரே பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என பார்வை (2) மற்றும் (3)ன் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தமிழ் வழிச்சான்றின் உண்மை தன்மை பார்வை (4),(5) மற்றும் (6) ன்படி பெறப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக ( பிணையமற்றது ) பணிபுரிந்து வரும் பின்வரும் பணியாளரின் பணியினை அவர் பணியேற்ற நாள் முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

(த.பி.பா)

| வ. எண் | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய பட்டியல் வரிசை எண் | பெயர் மற்றும் பதவி (செல்வி) | பணியேற்ற அலுவலகம் | பணி ஏற்ற நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 21 | எஸ். தினேஷ்குமார் | தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம், சென்னை–21 | 26.12.2023 முப | 26.12.2023 முப |

இப்பணிவரன்முறை சென்னை உயர்நீதிமன்ற சென்னை/ மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் உத்தரவிடப்படுகிறது. ( "The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/ Madurai Bench of the Hon'ble High court of Madras relating to the recruitment to the post included in Combined civil services Examination – IV ( Group – IV Services)".

மேற்காணும் பணியாளர் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும். இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்து, இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிட்ட பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டாவது மற்றும் தொடர் காலமுறை ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

30/1/25

தோட்டக்கலை துணை இயக்குநர்
சென்னை–21.

**பெறுநர்**

திரு. எஸ். தினேஷ்குமார், இளநிலை உதவியாளர்– இவ்வலுவலகம்.
**நகல்–** இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சேப்பாக்கம், சென்னை–5
அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்பிக்கப்படுகிறது
**நகல்–** பட்டியல் பிரிவு–இவ்வலுவலகம்.
நகல்– பணிப்பதிவேட்டிற்கு
நகல். இருப்பு கோப்பிற்கு
உபரி–1

28.01.2025